# DEPOSITION OF WITNESS
## IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KAMUTHI.
Case No.CC.69/2023

Prosecution witness – PW.2

| | | | |
|---|---|---|---|
| Name | :திருமதி.முத்துபாக்கியம் | Caste: | |
| Father's Name | : லிங்கம் | Calling: | |
| Village | : | Religion: | |
| Taluk | : | Age: | |

25.05.2026 – 12.40 PM

1 மற்றும் 2 எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

<u>அரசு தரப்பில் முதல் விசாரணை</u>:–

நான் சீமானேந்தல் கிராமத்தில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.1 எனது மகள். ஆஜர் எதிரிகளைத் தெரியும். அவர்கள் உள்ளூர்காரர்கள். வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. நான் வழக்கு சம்பவத்தை நேரடியாக பார்க்கவில்லை. சுமார் 4 ஆண்டுகளுக்கு முன்பு ஒரு நாள் நான் எனது வீட்டில் இருந்த போது போலிசார் வந்து என்னிடம் ஒரு வெள்ளைத்தாளில் கையொப்பம் பெற்றார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள அறிவேன் சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். **அந்த கையோப்பம் மற்றும் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

(அரசு தரப்பில் மேற்படி சாட்சியை பிறழ் சாட்சியாக பாவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரியதின் பேரில் அனுமதியளிக்கப்பட்டது)

<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>:–

கடந்த 11.05.2022 ம் தேதி ஆஜர் 1ம் எதிரி எனது மகள் வீட்டிற்கு சென்று ஆபாசமாக பேசி கொலைமிரட்டல் விடுத்ததால் அந்த மன அழுத்தத்தில் எனது மருமகள் சாணி பவுடரை குடித்ததாகவும் அதன் பிறகு 12.05.2022 ம்தேதி காலை 07.30 மணிக்கு எனது மகள் பூச்சிக்கொல்லி மருந்தை குடித்து அவரை கமுதி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்த போது போலிசாரிடம் எனது மகள் புகார் வாக்குமூலம் அளித்ததாகவும் அப்போது நான் அறிவேன் சாட்சியாக

கையொப்பம் செய்து கொடுத்ததாகவும் போலிசார் விசாரித்த போது சொல்லிவிட்டு எதிரி உறவினர் என்பதால் எதிரி கேட்டுக் கொண்டதன் பேரில் தற்போது எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

THANGA KARTHIKA

Digitally signed by THANGA KARTHIKA
Date: 2026.05.25 18:40:26 +0530